DB14-1-2-TA

# அதினால் நீங்கள் விசுவாத்தை விட்டு விலகிடாதிருப்பீர்கள் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்**: ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் இன்று, உயர்நிலை பள்ளியில் இருக்கும் போது தவறாமல் சபைக்கு சென்றுகொண்டிருந்த கிறிஸ்தவ வாலிபர்களில் 70% கல்லூரி மற்றும் பல்கலைகழகங்களில் சேர்ந்தவுடன் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைவிட்டு பின்னடைவை சந்திக்கின்றனர் என்று புள்ளிவிபரம் கூறுகிறது. அவர்கள் வளர்க்கப்பட்ட அந்த விசுவாசத்தை விட்டு அவர்கள் பின் வாங்க காரணம் என்ன? பல்கலைகழகத்தில் இணையும் மாணவர்கள் இன்னி அவர்கள் ஞாயிறு பள்ளியில் இருக்க அவசியமில்லை என நினைக்கின்றனர். மதசார்பற்ற பேராசிரியர்கள் கிறிஸ்தவம் எப்படி துவங்கியது என்ற கேள்வியை அவர்கள் முன் வைக்கிறார்கள். இயேசு யார். அவர் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று நம்பமுடியுமா? வேதம் நமக்கு எப்படி கிடைத்தது, அதில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்தையும் முழுமையாக நம்பலாமா?

32% கிறிஸ்தவ மாணவர்கள் தங்களுக்கு சமய நம்பிக்கையை குறித்த சந்தேகங்களினால் பின்மாற்றமடைந்ததாக சொல்கிறார்கள். அவர்களுடைய விசுவாசத்திற்கு எந்த அர்த்தமும் இல்லாமல் போயிற்று, பதிலளிக்க முடியாது என்று தோன்றும் வகையில் பல கேள்விகள் அவர்கள் முன்பாக இருப்பதுபோல நினைத்தார்கள்.

63% கிறிஸ்தவ இளைஞர்கள் இயேசுதான் உண்மையான தேவனுடைய ஒரே குமாரன் என்பதை விசுவாசிக்கவில்லை என்கின்றனர்.

51% இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை நம்பவில்லை என்கின்றனர்.

68% பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் ஒருவர் என்பதை நம்புவதில்லை என்கின்றனர்.

33 % மட்டுமே வீட்டிக்கு அடுத்ததாக சபைதான் தங்கள் வாழ்வில் மிகப்பெரிய பங்காற்றுகிறது என்கின்றனர்

ஆனா இந்த நிலையை மாற்றியமைக்க முடியும் என்று நம்புகிறேன். நான் நம்பிகொண்டிருந்த அனைத்தும் சவாலிடப்பட்ட என் கல்லூரியின் முதல் நாள் இன்னும் என் நினைவில் இருக்கிறது. எனவே நமது இந்த செய்திதொடருக்கு நான் வைத்திருக்கும் தலைப்பு “நம்முடைய மகன் மற்றும் மகள் கல்லூரிக்குள் நுழைவதற்கு முன்பு அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் என்ன, அவர்கள் தங்கள் விசுவாசத்தில் இடறாமல் இருக்க வேண்டும்” இந்த செய்தியானது மாணவர்களுக்கு மட்டும் என்றில்லை, கிறிஸ்துவை அறியாதவர்களோடு பணிபுரியும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும்.

இந்த காரியங்களை நமோடு பகிர்ந்துகொள்ள இருக்கும் இன்றைய விருந்தினர் Dr. டேரல் பாக், நமது தேசத்தில் இருக்கும் வரலாற்று இயேசுவை பற்றி எடுத்துசொல்லும் வல்லுனர்களில் ஒருவர், லூக்கா சுவிசேஷம் மற்று அப்போஸ்தலர் இரண்டையும் விளக்கும் உலக பிரசித்திபெற்ற நபராகவும் இருக்கிறார். இவர் புதிய ஏற்ப்பாடு பற்றிய ஆராய்ச்சிகளில் முதன்மை பேராசிரியராக டாலாஸ் தியோலஜிகள் செமினரியில் பணிபுரிகிறார், சுமார் 30 புத்தகங்களை எழுதி பல தொலைக்காட்சி பேட்டிகளில் பங்குபெற்றிருக்கிறார் ABC, CNN, Fox மற்றும் டிஸ்கவரி சேனல். ஜான் அன்கேர்பெர்கின் இந்த விசேஷித்த நிகழ்ச்சியில் நீங்களும் கலந்துகொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான் உங்களிடம் சில கேள்விகளை கேட்டால், கிறிஸ்தவத்தின் துவக்கம் என்னவென்று கேட்டால், உங்களால் எனக்கு பதில் சொல்ல முடியுமா? நீங்கள் உங்கள் பிள்ளைகளை கல்லூரி மற்றும் பல்கலைகழகத்திற்கு அனுப்பும்போது, இந்த கேள்விக்கு அவர்களால் பதில் சொல்ல முடியாமற்போனால், அங்கு அவர்களுக்கு பதில் அழிக்கப்படும், கல்லூரியில் இருக்கும் பேராசியர்கள், உங்களுடைய கருத்திற்கு மாறானதை சொல்லித்தருவார்கள். இது அவர்கள் விசுவாசத்தை அபகரித்துகொள்ளும். அந்த கேள்விக்குதான் இன்று நான் பதிலளிக்க விரும்புகிறேன்.

எனது விருந்தினர் Dr. டேரல் பாக். இவர் நம்முடைய தேசத்தில் வரலாற்றில் இயேசு பற்றி அறிந்த வல்லுனர்களில் பிரசித்திபெற்றவர், லூக்கா சுவிசேஷம் மற்று அப்போஸ்தலர் இரண்டையும் விளக்கும் உலக பிரசித்திபெற்ற நபராகவும் இருக்கிறார். இவர் புதிய ஏற்ப்பாடு பற்றிய ஆராய்ச்சிகளில் முதன்மை பேராசிரியராக டாலாஸ் தியோலஜிகள் செமினரியில் பணிபுரிகிறார். அவர் அதிகமாக ABC, CNN, Fox, மற்றும் டிச்கோவேரி சேனலில், தோன்றி பேட்டியளித்திருக்கிறார். சரி, டேரல், இன்றைக்கு நீங்க எங்களோடு இருப்பதில் மகிழ்ச்சி.

ஜனங்கள் பார்க்கும்படியா இதை திரையில் காண்பிக்க விரும்புகிறேன். இவை இன்றைக்கு போதனையாளராக இருக்கும் பேராசிரியர்களின் அறிக்கைகள், பிரசித்திபெற்ற பேராசிரியர்கள், ஒகே. ஜனங்களுக்கு அவர்கள் பெயர் தெரியாமலிருக்கலாம், இப்ப அவர்களை தெரிந்துகொள்ளுங்கள். ஈஸ்டர் மற்றும் கிறிஸ்மஸ் காலங்களில் இந்த பிரபலங்களை பார்க்க முடியும், இந்த பிரபலமான மனிதர்களைத்தான் பெரும்பாலும் பேட்டிகளில் நீங்கள் பார்க்க நேர்ந்திடும். சரி. இந்த நபர் பெயர் பார்ட் எர்மன் இவர் கிறிஸ்தவம் எப்படி ஆரம்பமானது என்பதை பற்றி எழுதுகிறார்: “ஆதிகாலத்தில் பலவிதமான ஜாதியார் இருந்தனர். தங்கள் இன்னம்தான் சரிஎன்றிருன்தனர். அவர்கள் சொல்வதை நிருபிக்கும் படியான புத்தகங்கள் இருந்தது, அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள். அதிலிருந்துதான் இயேசுவை பற்றிய கண்ணோட்டமும் அவருடைய முதல் கட்ட சீஷர்களையும் அறிந்துகொள்ள முடிந்தது. அந்த குழுவினர் ஒருபோதும் இயேசு போதித்ததையும் அப்போஸ்தலர்கள்

போதித்தத்தையும் முன்வைக்கவில்லை. மாறாக, அந்த வெற்றிவாகை சூடிய கூட்டம் தன்னை ஆர்தடாக்ஸ் என்றது, ஆனால் அது கிறிஸ்தவத்தின் உண்மையான துவக்கம் அல்ல, அது பல கடுமையான போராட்டங்களுக்கு பிறகுதான் தனது வெற்றியை அடைந்தது.

அடுத்த நபரின் பெயர் வால்டர் பாயர் இவர் 1934 அநேகர் குறிப்பிட்டு சொல்லும் புத்தகத்தை எழுதினார் ஹெர்சி அண்ட் ஆர்தடாக்சி மற்றும் ஆதிகால கிறிஸ்தவம், அதில் அவர், “ஆதிகாலத்தில்  ஒரு சில இடங்களில் ஹெர்சி தான் கிறிஸ்தவத்தின் உண்மையான தோற்றமாக இருந்தது, அதற்கு பிறகு கொஞ்சம்கொஞ்சமாக எல்லா இடங்களிலும் பரவிற்று என்று கூறுகிறார்.”

இதை இன்னும் புரிந்துகொள்ளும் வித்தத்தில் சொல்லுகிறேன், ஓகே. ஸ்டீவன் L.டேவிஸ், மதத்தை போதிக்கும் பேராசிரியர், சொல்கிறார், “1900 நூற்றாண்டுகளுக்கு மேலாக புதிய ஏற்ப்பாட்டின் கேனன் பகுதிகள் தான் வரலாற்று மையமாக இருந்து நசரேயனாகிய இயேசுவை பற்றி அறிந்துகொள்ள உதவியிருக்கிறது.” அதற்குபிறகு நடந்தது என்ன? “1945ல் இந்த நிலை மாற்றமடைந்தது.” சில நிமிடங்களில் அதை பற்றி சொல்லும்படியாக கேட்க இருக்கிறேன்.

ஆன்ரு சுலிவன், நியூ ரிபப்ளிக் பத்திரிக்கையின் முன்னாள் ஆசிரியர், “கடந்த 30 ஆண்டுகளில் உண்மையான சுவிசேஷத்தை கண்டுபிடித்திருக்கிறோம், அதில் ஆயிரக்கணக்கானவை, அதிகாரப்பூர்வமான சுவிசேஷங்கள் கிடையாது, ஆனால் ஆதி திருச்சபையின் ஆலோசனையில் அதுவும் இடம்பெற்றது என்கிறார்.

அடுத்து பிலிப் ஜென்கின்ஸ், வரலாறு மற்றும் மதத்தை போதிக்கும் பேராசிரியர் பென்சில்வேனியா இவர் சொல்கிறார், “மறைக்கப்பட்டிருந்த பல சுவிசேஷங்கள் இப்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது, அவற்றில் பலதும் இன்றைக்கு நம்மிடம் இருக்கும் வார்த்தைகள் இயேசுவை பற்றி சொல்லும் காரியங்களை வேறு விதத்தில் எடுத்து சொல்கிறது.” மேலும், “இயேசுவை பற்றி புதிய வியாக்கானத்தை தகர்ப்பதற்கு இந்த மறைக்கப்பட்ட சுவிசேஷம் பேருதவியாக இருக்கிறது.

திடீரென்று இந்த புதிய சுவிசேஷம் இயேசுவை பற்றிய புதிய கண்ணோட்டத்தை பெறுகிறோம், அதுதான் கிறிஸ்தவத்தின் துவக்கும் என்று சொல்லப்படுகிறது, மூன்று மற்றும் நான்காம் நூற்றாண்டில் இருந்தவர்கள் இதை சுருக்கினதாக சொல்லப்படுகிறது. என்ன நடக்கிறது என்பதை விளக்கமாக சொல்லுங்கள்.

**Dr. டேரல் பாக்:** சரி, என்ன நடந்ததென்றால் 1945ல் ஒரு கண்டுபிடிப்பு வெளியானது அதுதான் நேக் ஹம்மடி கோடிசஸ். அவர்கள் அதிகப்படியான பல வேதாகம சுவிசேஷங்களை கண்டறிந்தனர். சுவிலியன் சொல்வது, என்னனா, “நூற்றுக்கணக்கானவை” என்பது மிகைபடுத்தி சொல்வதுபோல இருக்கிறது, அதோடு, நம்மிடம் இருப்பதோடு ஒப்பிட்டால் இது பொருத்தமான இடத்தை அடையாமல் இருக்கிறது. இன்னும் வெளிப்படையா சொன்ன இதை பற்றி பேசும்போது 37, 38 சுவிசேஷங்கள் அங்கும் இங்கும் கலந்து இருப்பதை பார்க்க முடியும். அவற்றில் பெரும்பாலானது 2ம் நூற்றாண்டிற்கு பிறகு வந்தது. அவற்றை முதல் நூற்றாண்டோடு இணைத்து சில்லா எந்த சாத்தியமும் கிடையாது. காலத்திற்கு கொஞ்சமும் பொருந்தாத

இந்த விதமான சுவிசேஷங்களின் நிலை முதல் நூற்றாண்டு சாட்சிகளால் கொடுக்கப்பட்ட சுவிசேஷத்திற்கு இணையாகாது, இதுதான் நம்மிடம் இருக்கும் சுவிசேஷங்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, நீங்க சுவிசேஷம் என்ற வார்த்தை பயன்படுத்தியதால், அதை நான்கு சுவிசேஷங்களோடு ஒப்பிட்டு குழம்பிட வேண்டாம், சரியா.

**Dr. டேரல் பாக்:** சரிதான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதாவது 200 ஆண்டுகள் 300 ஆண்டுகள் கழித்து இவை எப்படி எழுதப்பட்டது என்பதை விளக்கி சொல்லும்விதமாக எந்த நபரோடும் தொடர்புடையதாக தெரியவில்லை இதுதான், உண்மை.

**Dr. டேரல் பாக்:** சரி, நீங்க பிலிப் ஜென்கின்சுடைய வார்த்தையை முன்வைத்தது எனக்கு மகிழ்ச்சி யளித்தது, ஏன்னா அவர் வரலாற்று இறையியல் வல்லுநர், இந்த காரியங்களை பற்றி ஆராய்ந்த வரலாற்று வல்லுநர் கிறிஸ்தவ கண்ணோட்டத்தின் படி எழுதியிருக்கிறார். அவருடைய புத்தகம், மறைவான சுவிசேஷங்கள், இந்த காரியங்களை பற்றி ஆழமாக விளக்குகிறது மேலும், அதில், இந்த கூற்றுகளில் இருக்கும் தன்மையை பிரச்சனையை அது முன்வைக்கிறது. நான் எழுதிய விடுபட்ட சுவிசேஷம் என்ற புத்தகத்திலும் இந்த மாதிரியான கருத்துகளின் தன்மையை சொல்லியிருக்கிறேன். இந்த புத்தகங்கள் எதை பற்றியது? என்ன சொல்ல வருகிறது? எதை போதிக்கிறது? அதனுடைய வம்சாவழியை சொல்ல முயலுகிறது எப்படி வந்தது, அவர்கள் போதிக்கும் இறையியல் எப்படிபட்டது, அவை எந்தவிதத்திலும் இயேசுவையோ அப்போஸ்தலர்களையோ நெருங்கவில்லை.

சுவிசேஷங்களில் நமக்கு சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள் மற்றும் இறை நம்பிக்கையற்றவர்கள் கூறியதாக சொல்லப்பட்ட  காரியங்களை கேட்டிருக்கிறோம், அதில் பெரும்பாலவற்றை தெரிந்துகொள்கிறோம், அப்போஸ்தலர்கள் தான் இந்த மாதிரியானவற்றை எழுதினார்கள் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை, ஆனால் இவை அனைத்தும் ஏதோவொரு வகையில் இயேசுவோடு தொடர்புடைய பாரம்பரியத்தில் வந்த இரண்டாம் மூன்றாம் கிறிஸ்தவ தலைமுறையினர் என்று சொல்லப்படுகிறார்கள்.

இதில் எந்தவிதமான நாத்திகத்தின் தாக்கம் இருக்கிறது. இயேசுவோடு தொடர்புடையவர்கள் அல்ல என்று பகிரங்கமாக சொல்லும் நாத்திகர்கள் உள்ளனர். வேறுசில நாத்திகரின் கருத்து என்னன்னா, சரி, இயேசுவின் சாயல் இருக்கிறது, ஆனால் நாம் ஜாக்கிரதையாக இருக்கும்படியான சில விஷயங்களும் அவர்களுக்குள் இருக்கிறது. பலவிதமான வாக்குவாதங்கள் அவர்களிடையே நடந்துவருகிறது. இந்த நிலையை அடையும்போதுதான் உங்களுடைய பிள்ளை தவரிப்போவதர்கான வாய்ப்பு உண்டாகிறது, பலவிதமான வண்ணங்கள் கொண்ட கண்ணோட்டம் மற்றும் மாற்று கருத்துகளால் அவர்கள் இடறலடைகிறார்கள், அவை அனைத்தும் ஒரே தரத்தில் வைக்கப்படுகிறது, ஒரே நிலையில், உண்மையில் பார்த்தால், 1900 வருடங்களாக

நம்முடைய சிறந்த காரணிகளாக நம்பப்படுவது சுவிசேஷங்கள் தான், இன்றைக்கும் பல வல்லுநர்களும் இதை மையமாக வைத்தே செயல்படுகின்றனர்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இப்ப இலேன் பாகேல் பிரின்ஸ்டன் சொல்வதை பார்க்கலாம், ஓகே. அவர் சொல்கிறார், " கிறிஸ்தவம் என்று அழைக்கப்படுவதை பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவை குறிப்பிட்ட காரியங்களை பற்றிய சிறிய பகுதியைத்தான் எடுத்துரைக்கிறது" - நாம் 1900 வருடங்களாக கேட்டுக்கொண்டிருப்பதை பற்றிதான் அவர் சொல்கிறார் – "மற்ற டசன் கணக்கில் இருப்பவற்றில் இருந்து ஒரு சிறிய பகுதிதான். இந்த எழுத்துகள் அனைத்தும் நாம் பார்க்கும் இந்த பகுதிகளில் இருந்து நிராகரிக்கப்பட்டு மத கொள்கைக்கு விரோதமானதென ஒதுக்கப்படுகிறது? இதை அவ்வளவு ஆபத்தாக்கினது என்ன?" இப்ப இந்த கேள்வியை உங்கள் முன்பாக வைக்கிறேன், எதினால் நாத்திகர்கள் பெரும்பாலும் இந்த பதத்தை பயன்படுத்துகிறார்கள், அதாவது "கிறிஸ்தவம் வெற்றியாலர்களால் எழுதப்பட்டது என்கிறார்கள் ஏன்? இந்த கருத்து தி டாவின்சி கோடில் சொல்லப்பட்டிருக்கும் சில கருத்துகளோடு ஒத்திருக்கிறது. கிறிஸ்தவம் வெற்றியாளர்களால் எழுதப்பட்டது என்று எதனால் சொல்லப்படுகிறது?

**Dr. டேரல் பாக்:** சரி, அதாவது, இது பல சமயங்களில் பாதி உண்மையாக வரலாற்றில் நாம் அறிந்துகொண்ட உண்மைகள் நமக்கு ஆதாரமாக இருக்கிறது என்ற கணிசமான உண்மையை விளக்குகிறது. நம்மிடம் இருக்கும் ஆதாரங்கள் அனைத்தும் தொடர்ந்து வந்ததாக இருக்கிறது. இந்த ஆதாரங்கள் மதிக்கப்படதக்கவை என்று கருதப்பட்டதால் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படி மதிப்புடையதாக இருக்கும் ஆதாரங்கள் இவற்றை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளும் அதிகாரத்தில் உடையவர்கள் அருளப்பட்டதாக இருக்கிறது. இதிலிந்து புரியும் விஷயம், வரலாற்றை வெற்றியாளர்களே எழுதுகின்றனர் மேலும் அவற்றை பகுதிகள் நமக்கு சுருக்கமாக அளிக்கப்பட்டிருக்கிறது,

ஆனால் நம்மை திசை திருப்பக்கூடிய ஒரு விஷயம் இதில் இருக்கிறது அதை சுட்டி காண்பிக்க விரும்புகிறேன். 1945ல் காணப்பட்ட நேக் ஹம்மடி யில், காணப்பட்ட விஷயங்களில் அதிகமாக இருந்தது என்னவென்றால் யோவானின் உறுதியற்ற கூற்றுகள் என்று சொல்லப்படுபவை. இது இரண்டாம் நூற்றாண்டில் பிரசித்திபெற்ற மறையியல் கிறிஸ்தவ சுவிசேஷமாக இருந்தது. இது நான்கு பிரதிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது – 2 பெரிய பிரதிகள் மற்றும் 2 சிறிய பிரதிகள். மேலும் இது புதிய இரகசியமான சுவிசேஷம் என்று எல்லாரையும் கவர்ந்தது. அது அருமையானதாக இருந்தது. உண்மையை சொன்னால், ஜனங்கள் இரகசியங்களை அறிய விரும்புவார்களே. இப்ப அதை அவர்கள் தெரிந்துகொண்டனர். இப்ப இன்னும் அதிகமா ஏதாவது தேவைப்படும்.

சரி, உண்மையில் அவர்கள் யோவானின் மறையியலை வாசித்தபோது, இந்த அமைப்புகளில் இதுதான் முதன்மையான நற்செய்தியானதாக கருதப்பட்டது, ஜனங்களால் பேசப்பட்டு வந்த அந்த அமைப்பினர், இந்த கதைகள் எல்லாம் கேள்விப்பட்ட விதமாகவே இருப்பதை கண்டறிந்தனர். அது பிரபலமாக இருந்ததற்கு காரணம் இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்த நற்செய்தியை பற்றி எழுதினபோது

இந்த கதைகளை கூறியிருந்தார், அது 180ல் நடந்திருக்கும். எனவே இந்த புதிய, விடுபட்ட, மறைவான, இரகசியமான, பெயர் தெரியாது நற்செய்தி பல காலங்களுக்கு முன்பாகவே இருந்ததுதான், 1800 வருடங்களுக்கு முன்பு. எனவே, புதியது புதுமையானது என்று சொல்லிக்கொண்டு தவறாக திசைதிருப்பும் காரியங்கள் இப்போது கூர்மையான முனையில் நிற்பது போல காணப்படுவதோடு அது தேவையற்றதாகவும் தோன்றுகிறது.

பல சமயங்களில் இந்த மாதிரியான விஷங்களில் இருந்து சத்தியத்தோடு கலந்த சில கலவைகள் தான் கிடைக்கிறது. உண்மை என்னன்னா, வரலாறுகள் வெற்றியாளர்களால் எழுதப்படுகிறது. நீங்க கேள்விப்படாத மற்றொரு சத்தியம் ஏனன்னா, வெற்றியாளர்களே சில சமயங்களில் வெற்றிக்கு பாத்திரறாகிரார்கள், ஏன்னா இது அதிகமாக பரவிடும் அமைப்பு என்பதற்கு பல வரலாற்று காரணங்களும் வரலாற்று அடிசுவடுகளும் காணப்பட்டு வருகிறது, இந்த அமைப்புகளுக்கு சிறந்த பாரம்பரிய பின்னணி இருக்கிறது, அதை பிடித்துகொண்டு போனால் நிச்சயம் இயேசுவையும் அப்போஸ்தலர்களையும் சென்று அடையமுடியும் என்பது சாத்தியம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, உண்மை இதுதான், இந்த நேக் ஹம்மடியின் சிலவற்றை எடுத்து கூறிய சில சபை பாதிரியார்கள், சபையானது இந்த காரியங்களை வாசிக்க கூடாது என்றனர், மற்ற காரணங்களால் அதற்கு தடை விதித்தனர், அப்போஸ்தலர்களுக்கு பிறகு அவை எழுதப்பட்டதால் அவற்றை அவர்கள் நிராகரித்தனர்.

**Dr. டேரல் பாக்:** பிரச்சனை நிறைந்த இறையியல் அவர்களிடம் காணப்பட்டது, அதில் இயேசு போத்தித்த காரியங்களில் மட்டும் பிரட்ச்சனை காணப்படவில்லை. தேவனை குறித்து சொல்லப்பட்ட இறையியல் காரியங்களில் கூட அதிக குழப்பங்கள் இருந்தது. கிறிஸ்தவம் யூத மார்க்கத்திலிருந்து வெளிவந்த ஒன்றாகும், யூத மார்க்கத்திற்கான மரியாதை உள்ளது. உண்மையில், ஆதி அப்போஸ்தலர்கள் தேவாலயங்களுக்கு சென்று போத்தித்தனர், "ஆதிகாலத்தில் ஆபிரகாமிற்கும் தமது ஜனங்களுக்கும் தேவன் அளித்த வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதல் என்று அவர்கள் போதித்தனர்."

எபிரேய வார்த்தைகளின் இறையியலின் மையப்பொருளை அவர்கள் ஒப்புக்கொண்டனர், பழைய ஏற்ப்பாடு. அந்த மையபொருளின் கருத்துகளில் ஒன்று தேவனே சர்வ சிருஷ்டிக்கும் காரணராக இருக்கிறார் அவர் சிருஷ்டித்த யாவும் நல்லது. யோவானின் உறுதியாகாத நற்செய்தி மற்றும் மறையியலில் சொல்லப்பட்டிருக்கும் சிருஷ்டிப்பபை குறித்த செய்தியில், தேவன் உண்டாக்கவில்லை என்றிருக்கிறது. தேவர்கள் என்றிருக்கிறது. ஆரம்பத்திலிருந்தே அவர்கள் குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். தேவன் சிருஷ்டிக்கவில்லை என்று சொல்வதோடு விடாமல், சிருஷ்டிக்கப்பட்ட எதுவும் ஆரம்பத்தில் அவ்வளவு நல்லதாக காணப்படவில்லை என்கின்றனர். இது இரண்டகம் உடையது, ஆவிக்குரிய உலகத்தை விட இந்த இயற்கையானது மேலானதாக காண்பிக்கப்படுகிறது, இதை தான் நியோ பிலாட்டனிசம் என்கிறோம். அது யூத மார்க்கமல்ல. ஆதி கிறிஸ்தவ அமைப்பில் உன்புகுத்தப்பட்ட யூத மார்க்கம் இது அல்ல. உலகமானது எந்த விதத்திலும் ஆதிகால கிறிஸ்தவ சந்ததியாரின் விசுவாத்திற்குள் நிலைய முடியாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சபையானது பழைய ஏற்ப்பாட்டை ஏற்றுக்கொண்டு இயேசு தன்னை பற்றி சொல்லியிருக்கும் காரியங்களை ஒப்புக்கொண்டால், அவருடைய மரணம் உயிர்த்தெழுதல், இந்த உலகின் இரட்சகர் என்பதை ஏற்றுக்கொள்பவர்கள் இந்த மாதிரியான கருத்துகளை எளிதில் நிராகரித்திடுவர்.

**Dr. டேரல் பாக்:** அதுதான் உண்மை. இதிலிருந்து நமக்கு தெரிய வரும் விஷயம் இந்த இறையியல் கலப்படம் காலத்தை பற்றிய சிந்தனையையும் கிறிஸ்தவர்களின் வெளிப்பாட்டையும் இணைத்து சொல்ல முயன்று, சிதைந்த நிலையிலான கிறிஸ்தவம், மற்றும் மாற்றுகருதுடைய கிறிஸ்தவம், என்று சொல்லி கலாசார ரீதியாக அதை ஒதுக்கிட முயலுகிறது. இது மிகவும் பிரசித்தி பெற்றதாக இருந்தது. இரண்டாம் நூற்றாண்டில் பகிரங்கமாக இருந்த காரியம். ஆதி திருச்சபையின் வரலாற்றில் இதை பற்றிய நிறைய வரலாற்று பதிப்புகளை பார்க்க முடியும், அதி தலைமுறையினரின் பதிவுகளில் இருக்கிறது. ஆனால் இந்த வல்லுநர்கள் விவாதிக்கும் நிலை எதுவும் இயேசுவை பற்றிய நமது புரிந்துகொல்லுதளையும் புதிய ஏற்ப்பாட்டின் தரத்தையும் பாதிக்க வில்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம். மீண்டும் வந்ததும் இந்த சுவிசேஷங்களை எப்படி பெற்றுக்கொண்டோம் என்பதை குறித்ததான காரியங்களை பார்த்திடலாமா? இயேசுவிலிருந்து தொடங்கிடலாம், பிறகு அப்போஸ்தலர்கள், அதற்கு பிறகு எப்படி பரவியது? திரும்பி வந்து அதை பற்றி பேசிடலாம். இணைந்திருங்கள்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வறுகள். நாம் பேசிக்கொண்டிருப்பது டாக்டர் டேரல் பாக்குடன், உலகின் பிரசித்திபெற்ற லூக்கா சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலர் நடபடிகளின் வல்லுனர்களில் ஒருவர். இப்போது நான் உங்களிடம் கேட்க விரும்பும் கேள்வி என்னவென்றால், டேரல், இறையியலின் மையக்கருத்தும் சபையில் போதிக்கப்பட்ட நமது நம்பிக்கைகளும் இயேசுவின் போதனையில் இருந்துதான் வந்தது அப்போஸ்தலர்கள் மூலமாக நமக்கு அளிக்கப்பட்டது என்று நமக்கு எப்படி துல்லியமாக தெரியும்? ஆரம்பத்திலிருந்து சொல்லுங்க அல்லது இப்போதிலிருந்து ஆரம்பிங்க. இதை நீங்க எப்படி விளக்கி சொல்வீங்க?

**Dr. டேரல் பாக்:** சரி, வாய்மொழியாக கடந்துவந்த பாரம்பரியத்தின் தரத்தை குறித்துதான் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். நாம் வாய்மொழி கலாசாரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். முன்மொழியாக எழுதப்பட்ட கலாசாரத்தில் நாம் வாழ்வதில்லை. எனவே, எல்லா விஷயங்களும் வாயின் வார்த்தை வடிவில், ஒருவரிடம் இருந்து ஒருவருக்கு, ஒரு சமுதாயத்திலிருந்து அடுத்ததுக்கு என்று கடந்துவந்தது. சரி, இந்த உண்மையை வைத்துகொண்டு வகுப்பறையில் சொல்லப்படும் காரியம் ஏனன்னா, "சரி, நம்முடைய ஆதாரங்கள், எழுதப்பட்ட பதிவுகள், அனைத்தும் நிகழ்வுகளுக்கு பிறகு எழுதப்பட்ட காரியங்கள் தாம். சுவிசேஷங்களை பொறுத்தவரை 40-60ஆண்டுகளுக்கு பிறகு எழுதப்பட்டது. இது மிகப்பெரிய இடைவெளி. அந்த இடைப்பட்ட காலத்தில் என்ன வேண்டுமானாலும் நடந்திருக்க முடியும் என்பார்கள்."

சரி, வாய்மொழி வரலாற்றில் இருக்கும் பிரச்சனை என்னவென்றால் ஆதாரங்கள் என்று ஒன்றும் இருக்காது. பார்க்கும்படியான ஆதாரங்கள் இருக்காது. ஆதிகாலத்தில் எப்படி வாய்மொழி கலாசாரத்தில் செயல்பட்டிருப்பார்கள் என்று கற்பனை செய்திட வேண்டும். இதில் இருக்கும் விவாதம் என்னன்னா அப்ப எல்லா விதமான காரியங்களும் நடந்திருக்குமே, இந்த கதையில் பலவிதமான வளர்சிகள் மாற்றங்கள் நடந்திருக்கும். இதுதான் மிகப்பெரிய மிகவும்பெரிய- இத எப்படி சொல்றது? –அதாவது நிகழ்வுகளுக்கும் நமக்கு சொலப்பட்டிருக்கும் பதிவுகளுக்கும் இடையில் இப்படியொரு மிகப்பெரிய கேள்வி எழுந்தது. அதனால உண்மை சம்பவத்தை புரிந்துகொள்ள ஆதாரங்களை நம்ப முடியாது. இந்த இடைவெளியை முதலில் சரிசெய்ய வேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, ஏன்னா இயேசு 30களில் மரித்திருந்தால், இதுதான் முதல் இடைவெளி, நீங்க ஒருவேளை புதிய ஏற்ப்பாட்டின் எந்த புத்தகம் முதலாவது செய்திமாடத்திற்கு வந்ததென்று கேட்கலாம், இதற்கிடையில் ஒரு இடைவெளி இருப்பதை பார்க்கிறோம்.

**Dr. டேரல் பாக்:** சரியாக சொன்னீங்க. சரி, பழமைவாதிகளில் சிலர் சுவிசேஷங்களின் தேதிகளை 60கள் என்கின்றனர், எழுதப்பட்ட சுவிசேஷங்கள். யோவானை 90கள் என்கிறார்கள். எழுதப்பட சுவிசேஷங்களின் காலத்தை சில வல்லுநர்கள் 80 மற்றும் 90கள் என்கிறார்கள். அப்படிபார்த்தா இங்குள்ள இடைவெளி 30லிருந்து 50, நிகழ்வுகள் நடந்ததற்கும் பதிவு செய்யப்படுவதற்கும் இடையில் 60 ஆண்டுகள் வரை இடைவெளி இருக்கும். இது ரொம்ப அதிகமான இடைவெளி. இந்த இடைப்பட்ட காலத்தில் பல காரியங்கள் நடந்திருக்க வாய்ப்புண்டு. ஆமா, உண்மையில், பல காரியங்கள் நடந்திருக்கும் என்றுதான் சொல்லப்பட்டு வருகிறது.

நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்றால் அந்த இடைவெளியை நிரப்ப ஆசைபடுகிறேன். வாழ்மொழி கலாசாரத்தில் இருந்தோம். அதை பற்றி யோசித்து பார்க்கும்போது, இறையியலின் காலத்தை பவுலுக்கு நேராக திருப்பி பார்க்க முடியும். சரி, இறையியலை திருப்பி பார்ப்பதற்கு பவுல் மிக முக்கியமான நபராக இருக்கிறார், என்ன அவர் மறித்தது 60களில், அவர் 50களிலும் 60களிலும் இவற்றை எழுதியிருக்கிறார். அவர் தனக்கு 30களில் ஏற்ப்பட்ட அனுபவத்தையே இங்கு எழுதுகிறார், 30களில் அவர் தழுவிக்கொண்ட அந்த சத்தியங்களை எழுதுகிறார். இந்த இடைவெளியில் என்ன நடக்கிறதென்று பாருங்கள். ஒகே, சுருக்கமாகிறது. திரும்பவும் அதேயிடம். எல்லா நிகழ்வுகளுக்கு மேலானதாக இருக்கிறது. நாம் பேசிகொண்டிருக்கும் நிகழ்வுகள் சம்பவித்த ஓரிரு ஆண்டுகளில் பவுல் மனம் மாறினார் என்ற பலரும் புரிந்துகொண்டிருக்கின்றனர். அவர் மனம் திரும்புவதற்கு முன்பு சபைக்கு எதிரானவராக சபையை துன்பப்படுத்திக்கொண்டிருந்தார். அவருடைய மன மாற்றத்தின் நாளை பார்க்க அதிக தூரம் பின்னுக்கு செல்ல வேண்டியதில்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, சொல்லப்போனா, இயேசு மரித்தது 30, பவுல் மனமாற்றம் அடைந்தது 31-32ற்கு இடையில், சரியா.

**Dr. டேரல் பாக்:** அதுதான் சரி.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்ப 1 கொரிந்தியரை அவர் 50களில் எழுதுகிறார், மற்ற புத்தகங்களையும் எழுதினார், கலாத்தியரை, 40 எழுதினார். சரி, அப்படிஎன்றால்...

**Dr. டேரல் பாக்:** அவருடைய உரையாடலின் அனுபவத்தை பற்றி கூறுகிறார். அவருடைய உரையாடலின் அனுபவம் மற்றும் உயர்த்தப்பட்ட இயேசுவை பற்றிய காரியங்கள் 30களில் சம்பவித்தது. என்ன நடக்கிறது என்று கவனிக்கும் பொது இந்த காரியங்கள் தான் முதன்மையானதாக நிற்கிறது. அவருக்கு பேதுருவோடு ஐக்கியம் இருந்தது. பேதுரு யாக்கோபு பவுல் ஒருவரை ஒருவர் அறிந்திருந்தனர். ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள். எனவே, பவுல் நமக்கு அறிவித்த இந்த இறையியல் காரியங்கள் தான் அப்போஸ்தலர்களின் வட்டாரத்தில் பேசப்பட்ட ஒன்றாக இருந்தது. இவர் 1 கொரிந்தியர் 15ல் சொல்லும்போது, அவர் பெற்றுக்கொண்ட கலாசாரத்தை சொல்லுகிறார், அவர் தன்னை அந்த சம்பவத்தின் ஒரு பகுதியாக கருதுகிறார், எதிராளி என்ற ஸ்தானத்திலிருந்து அதில் ஒரு பங்காக அவர் நிலைநிருத்திக்கொண்டார். புதிய ஏற்ப்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் இறையியலை மையப்படுத்தி இந்த இடைவெளி குறைந்திருப்பதை இதில் பார்க்கின்றோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அது மிகவும் குறைந்துவிட்டது, இதற்கான அற்ஹ்த்டம் என்ன? அதாவது, நாம இப்ப நிகழ்வுகளின் உச்சியில் இருக்கிறோம்.

**Dr. டேரல் பாக்:** அது சரிதான். நாம நிகழ்வுகளின் ஆரம்பத்தில் இருக்கிறோம். சரி, இப்ப, இயேசு சிலுவையில் அறியப்பட்டது 30தா 33றா என்ற விவாதம் நடக்கிறது. இந்த விவாதத்திற்கு இது அவசியமில்ல. நாம பார்த்து கொண்டிருக்கும் விஷயம் இந்த காரியங்களுக்கு 2 வருடங்களுக்கு பிறகு நடந்தது இந்த நிகழ்வுகளின் விளைவாகத்தான் துன்புறுத்தப்படுதல் நிகழ்ந்தது. ஆதாரங்களை வைத்து பார்க்கும் போது நிகழ்வுகளின் துவக்கத்தில் இருக்கிறோம். இதை நான் வேர்விதமாக சொன்னால், வாய்மொழி சுருக்க நிலை யோசித்துபார்த்தால், அந்த நிகழ்வுகளுக்கு சம்பந்தமான பலகாரியங்களையும் அதில் மையமாக இருப்பவர்களை அவர்கள் எதை பற்றி எழுதினார்கள் என்பதையும் தெளிவாக  பார்க்கலாம்.

சரி, இறையியல் பிரதிபலிப்பு இருக்கிறது எனபது உண்மைதான். இதை பற்றிய காரியங்களை பார்க்கும்போது அதில் வெளிப்படுத்தப்பட்ட விஷயங்களில் சில இறையியல் முன்னேற்றங்கள் காணப்படுவதும் உண்மைதான். இவை அனைத்தும் புதிய ஏற்ப்பாட்டில் காணப்படுபவைகளுக்கு ஒத்திருப்பதுபோல இருக்கிறது. ஆனால் முக்கியமான இன்று இயேசுவின் உயிர்த்தெழுதல், அவர் தேவனால் உயர்த்தப்பட்டார், என்பதே. மெய்ப்பித்து காட்டப்பட்டது, சீஷர்கள் இதை நம்பினார்கள், இதை பற்றிதான் அவர்கள் போதித்தனர்,,, இதெல்லான் 30களில் நடந்தது. மிகவும் பிரசித்திபெற்ற வல்லுநர்கள் கூட, மார்டின் ஹென்கள் போன்ற பலர், இந்த நிகழ்வுகள் அனைத்தும் எப்படி இறையியலுடன் இணைந்த்திருக்கிறது என்பதை பற்றி எழுதியிருக்கிறார்கள். உண்மையில், ஹென்கள் அழுத்தமாக ஒன்றை சொல்லியிருக்கிறார் அதாவது இந்த நிகழ்வுகள் சம்பவித்த பிறகு இறையியலில் மிகப்பெரிய முன்னேற்றம் காணப்பட்டது, அதன் நிழலின் பிரதிபளிப்பானது சீக்கிரத்தில் நடைமுறையில் காணப்பட்டது, அதற்கு பிறகு எந்த காலத்திலும் அப்படி நடக்கவில்லையாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இதை பற்றி சொல்லுங்கள், இந்த இறையியல் எங்கிருந்து வந்தது? ஏன்னா இதை சில வாலிபர்களிடமிருந்து பெற்றுகொண்டோம், அதாவது, இதை மூன்றாம் நான்காம் நூற்றாண்டில் இருந்தவர்கள் உருவாக்கினார்கள், ஏன்னா ஆரம்பத்தில் இந்த வாய்மொழி கலாச்சார நாட்களில் இறையியல் காரியங்கள் திடமானதாக இருந்தது. இது எங்கிருந்து வந்தது?

**Dr. டேரல் பாக்:** முதல் நூற்றாண்டில் இறையியல் திடமானதாக மட்டும் இருக்க வில்லை – அது, அதாவது, விவாதம் என்னன்னா இயேசு சீஷர்களுக்கு எதை போத்திதாரோ அதைதான் அப்போஸ்தலர்கள் தொடர்ந்து போதித்தனர் என்பதுதான். இதை வைத்து நீங்கள் விவாதிக்க முடியும் – ஆனா முதல் இரண்டு நூற்றாண்டுகளில் இது அசைக்கமுடியாத திடமான ஒன்றாக இருந்தது. சபையில் கேனன் அறியப்பட்டு பிர்ச்தாபிக்கப்படுவதற்கு முன்பு இருந்த எழுத்துக்களை நாம் பார்க்கும்போது, இந்த 27 புத்தகங்களை குறித்த எண்ணம் எப்படி வந்தது, கேனன் பயன்பாட்டில் இல்லாத காலகட்டத்தில் கூட சபையானது வேதம் இல்லாமல் இறையியலை போதித்தது, “வேதத்தை ரோமருக்கு திருப்புங்கள், 1 கொரிந்தியருக்கு திருப்புங்கள் என்று சொல்லவில்லை, இவை அனைத்தும் ஒன்றாக சேர்க்கப்பட்டது. அவர்களுக்கு ஒரேவொரு நற்செய்திதான் தெரியும், பவுலின் ஒருசில நிருபங்களை அறிந்திருந்தனர். நாம் இந்த எழுத்துக்களை ஆராய்ந்து பார்த்தால் ஒரேவொரு விஷயம்தான் ஆணித்தரமாக தொடர்ந்து சொல்லப்பட்டிருக்கும். அதுதான் மையப்பொருளாக பார்க்கப்படுகிறது, அதுதான் பிடிமானம், 30களில் இருந்து இரேனியஸ் கேனனை பற்றிய ஆலோசனையை ஆரம்பித்ததுமுதல் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்த காரியம் இதுதான். ஒரு முக்கியமான விஷயம்தான் தொடர்ந்து சமுதாயத்திற்கு எடுத்து சொல்லப்பட்டது என்பதைதெளிவு படுத்துகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், எல்லா புத்தகங்களிலும் பொதுவாக பெரும்பாலும் சொல்லப்பட்டிருக்கும் இறையியல் மையப்பொருளை பட்டியல் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள், சரி. இதில் நீங்கள் பார்த்த சில காரியங்களை பட்டியலிட்டு எனக்கு சொல்ல முடியுமா.

**Dr. டேரல் பாக்:** தேவனே சிருஷ்டிகர். ஒரு இரட்சகர் தேவை என்ற காரியமும் அந்த இரட்சகர் பழைய ஏற்ப்பட்டு வாக்குத்தத்தங்களின் படி வந்தார். இந்த நபர் தன்னை மெய்ப்பித்து கான்பித்திடுவார். இந்த சம்பவத்தில் அவர் உயர்த்தப்பட்டவராக இஐப்பார். இரட்சிப்பு என்னும் அனுபவத்தில் சரீரம் ஆத்துமா ஆவியும் அடங்கும், வெறும் ஆவியும் ஆத்துமாவும் இருக்காது. இரண்டு நூற்றாண்டுகளில் பலவிதமான கருத்துகள் நிலவிக்கொண்டிருந்தது. இது திடமானதாக இருந்துவந்தது. அதுதான், முதல் இரண்டு நூற்றாண்டின் எழுத்தாளர்களுக்கு முக்கியமான மையப்பொருளாக இருந்துவந்தது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இயேசுவே தேவன் என்பதிலிருந்து அது தொடங்கியது.

**Dr. டேரல் பாக்:** இந்த ஆதாரங்களில் இயேசுவெ தேவன் என்பது வெளியானது. புதிய ஏற்ப்பட்டு ஆதாரங்களில் கூட இயேசு தேவன் என்று சொல்லப்படுகிறார், புதிய ஏற்ப்பட்டு ஆதாரங்களை பற்றி கூறும் சில நாத்திகர்கள் கூட அவர் தேவனுக்குள்

இல்லை, அவரே தேவன் என்றனர், அவர் தாம் செய்த காரியங்கள் மூலமாக தன்னை தேவனாக வெளிப்படுத்தியதாக கூறுகின்றனர்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், நேயர்களே, யோவான் 3:16கூறுகிறது, “தேவன் தம்முடைய ப்ரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” காலா காலமாக சொல்லப்பட்டு வரும் புதிய ஏற்ப்பாட்டு இறையியலின் மையப்பொருள் இதுதான். அடுத்த வாரம் நாம் பார்க்கப்போகிற காரியம் என்னவென்றால், அது சரியாக சொல்லப்பட்டு வந்ததா, அல்லது ஜனங்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்றார்போல அதை மாற்றிக்கொண்டனரா? அதை பற்றிதான் பேசப்போகிறோம். நிச்சயம் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.